செ.வெ.எண்: 41/மே நாள்: 23.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

# மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் 2016-ன் நடத்தை விதிகள் முடிவடைந்ததையொட்டி, பிரதி வாரம் திங்கள் கிழமை தோறும் நடத்தப்பட்டு வரும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (23.05.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ன் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 2 மாதங்களாக பிரதி வாரம் தோறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படாமல் இருந்தது. தற்போது சட்டமன்ற பொதுத்தேர்தல் முடிவடைந்ததையடுத்து இன்று வழக்கம்போல் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் கோரிக்கைகளை மனுக்களாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் வழங்கினார்கள். இதனைத் தொடர்ந்து பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி சம்பந்தப்பட்ட அரசுத்துறை அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவு பிறப்பித்தார்.

அதன்பின்பு பள்ளிக்கல்வித்துறையின் சார்பாக இராமநாதபுரம் மாவட்ட மாநில திட்டக்குழுவின் கீழ் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் மூலம் அரசு பள்ளிகளில் பயிலும் மீத்திறன் மாணவர்களுக்காக நடத்தப்படும் எலைட் எனும் சிறப்பு பயிற்சி வகுப்பில் பயின்று 2015-2016ஆம் கல்வி ஆண்டிற்கான பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகள், மருத்துவம் மற்றும் இஞ்சினியரிங் கட் ஆப்பில் மாநில அளவில் முதலிடம் பெற்ற மாணவ, மாணவிகள் மற்றும் 1150க்கு மேல் மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பாராட்டி ஊக்குவித்தார். தனியார் பள்ளி மாணவ, மாணவிகள் மட்டுமே மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரியில் சேர முடியும் என்ற நிலை மாறி , அரசு பள்ளி மாணவ, மாணவிகளும் மருத்துவம் மற்றும் தலைசிறந்த பொறியியல் கல்லூரிகளில் படித்து சாதனை புரிய முடியும் என்பதை வலியுறுத்தி இந்த மீத்திறன் மாணவ, மாணவிகளுக்கான இச்சிறப்பு பயிற்சி வகுப்பு திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. மாநில திட்டக்குழுவின் - மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி, தற்போது வரை மாவட்ட நிர்வாகத்தால் வழங்கப்பட்டு வரும் ஊக்கம் மற்றும் எலைட் சிறப்பு பயிற்சி வகுப்பு ஆசிரிய, ஆசிரியைகளின் அயராத உழைப்பே இத்திட்டம் சிறப்படைய காரணமாக இருந்தது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, எலைட் வகுப்பின் ஒருங்கிணைப்பாளர் திரு.எஸ்.நவநீதகிருஷ்ணன் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது**